விசேட மலர்

விலை 0—2—0

இடி

ஆசிரியர்:
பண்டிட் ஜெயிலானி, M. A. (U. S. A.) "விஷாரத்"
தாராபுரம்.

"நகுதற் பொருட்டன்று நட்டல், மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு"

நாயுடுவின் தேர்தல் சின்னம்

நாடு நலம் பெற
நாயுடுவுக்கே உங்கள்
வாக்குகளைத் தாருங்கள்.

இடி 2

தமிழ் வாரச் செய்தித் தாள்.
2—1—52 புதன்கிழமை

ஒலி 1

விஞ்ஞானி திரு. ஜி. டி. நாயுடு

(வாழ்க்கை வரலாறு)

துரைசாமி குறும்புக்காரன். இளமையிலே அவன் செய்யாத அட்டகாசம் ஒன்றும் இல்லை பள்ளிக்கூடத்திற்குப் போவான். பல சண்டைகளை வலிய இழுத்துக் கொள்வான். அதுமாத்திரமா? உபாத்தியாயர் கண்ணிலே மண்ணை வாரியும் இறைத்தான். இந்தப் பையனை யார்தான் படிக்க வைப்பார்? ஆக, பள்ளி வாழ்க்கையும் முற்றுப் பெற்றது. இவனது பிறந்த ஊர் கோவைக்குப் பக்கத்தில் உள்ள 'கலங்கல்' என்ற சிறிய கிராமம். தகப்பனார் கோபால்சாமி நாயுடு பையனின் துடுக்குத்தனத்தை அடக்க தோட்டத்திலே சிறைவாசம்போல் வைத்துவிட்டார். எப்படியாவது பள்ளியைவிட்டு விடுதலை கிடைத்ததே என்ற ஆனந்தம் துரைசாமிக்கு. இப்படியே நாட்கள் சில கடந்தன. தீபாவளிப் பண்டிகை வந்தது தந்தை கோபால்சாமி நாயுடு, என்னதான் துரைசாமி குறும்பு செய்தாலும் அவன் இல்லாமல் பண்டிகை கொண்டாடுவாரா? தோட்டத்திலிருந்த துரைசாமியை வீடுவந்து சேரும்படி வேலைக்காரனை அனுப்பினார். சும்மா சென்றானா துரைசாமி! குதிபாட்டம் போட்டுக்கொண்டு போனான். வழியிலே வைக்கோல் வண்டி ஒன்று தென்பட்டது. அதில் நெருப்பை வைத்தான். அந்த ஜோதியைக்கண்டு நர்த்தனமாடினான். வைக்கோல் போர் சொந்தக்காரன் தன் வயிற்றிலும் நெருப்பு பிடித்தாற் போல் அலறினான். துரத்தினான் துரைசாமியை. துரைசாமியா சிக்குவான்! பறந்துபோய் வீடு சேர்ந்தான். தந்தை, படுசுட்டியின் உபத்திரவத்தை எத்தனைநாள் பொறுத்துக் கொண்டிருப்பார். மீண்டும் கோபத்தோடு தோட்டத்திற்கே அனுப்பிவிட்டார். தந்தை கோபால்சாமி நாயுடுவுக்கு, ஒரு குடியானவன் தன் தோட்டத்திலே விளைந்த மாதுளம் பழத்தை பரிசாகக் கொடுத்தான். படுசுட்டி துரைசாமி இதைப் பாத்துக்கொண்டேயிருந்தான். அந்த குடியானவனிடம் தனக்கு ஓர் பழம் கேட்டான். அவன் கொடுக்க மறுத்தான். அவ்வளவுதான்! மறுநாள் அவன் தோட்டத்தில் மருந்துக்குக்கூட ஒரு மாதுளம்பழம் இல்லை. "இப்படியுமா ஒரு பிள்ளை பிறக்கும்" என்று பேசாத மக்கள் இல்லை. துரைசாமியும் தன் குறும்புத்தனத்தை செய்யாத நாளில்லை.

இன்னுமொரு வேடிக்கை. ஓர்நாள் சிறுவர்களெல்லாம் பட்டம் பறக்க விட்டுக்கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்த துரைசாமிக்குப் பட்டம் பறக்கவிட ஆசை வந்தது. தன்னிடமோ பட்டம் இல்லை. கொஞ்சம் யோசித்தான். பக்கத்து பையனிடமுள்ள பட்டத்தை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டான். அந்தப் பட்டத்தில் பறக்கவிட கயிறு இல்லை. பட்டத்தை எப்படி துரைசாமி பறக்க விடுவான்? கொஞ்சநேரம் யோசித்தான். எங்கோ, யாரோ, எதையோ தட்டுகிற சப்தம் கேட்டது. அந்த ஒலி வரும் திசையை நோக்கினான். அங்கே ஒரு ஆசாரி பட்டரை வைத்து நகை செய்துகொண்டு இருந்தான். துரைசாமி மெல்ல அங்கே போனான். அந்த ஆசாரி தங்கத்தை சன்ன கம்பியாக இழுத்த ஒரு சுருள் வைத்திருந்தான். அவ்வளவுதான்! அதைக் கயிறாக உபயோகித்து துரைசாமி பட்டம் பறக்க விட்டான். இதைப் பார்த்தால் கவிஞர் "ஷெல்லி" யின் ஞாபகம் வருகிறது. கவிஞர் ஷெல்லிக்கு காகிதத்தில் கப்பல் செய்து நீரில் மிதக்கவிட ஆசை பிறந்ததாம். தன் மனைவியிடம் அதற்காக காகிதம் கேட்டானாம். அவளும் கொடுக்க மறுத்து விட்டாளாம். அப்பொழுது அவள் கையில் நூறு பவுன் நோட்டு ஒன்று இருந்ததாம். ஷெல்லி அதை வெடுக்கென்று பிடுங்கி உடனே அதில் கப்பல் செய்து நீரில் மிதக்கவிட்டு வேடிக்கை பார்த்தானாம். அந்த ஷெல்லியும், இந்த துரைசாமியும் ஒரு ரகத்தைச் சார்ந்தவர்களோ என்னவோ?

இந்தமாதிரி துரைசாமி செய்த குறும்புத்தனத்திற்கு அளவேயில்லை. நாட்கள் நகர நகர துரைசாமிக்கு வாலிபப் பருவம் வந்தது. ஒருவாறு தோட்டத்து ஜோலியை முடித்துக்கொண்டு கலங்கல் கிராமத்திற்கு வந்து சேர்ந்தான். இனியும் துரைசாமியை அவன் என்று அழைப்பது நியாயம் இல்லை. அவர் என்றுதான் அழைக்கவேண்டும்.

குறும்புத்தனத்திலே வளர்ந்த துரைசாமி வாலிபப் பருவம் பெற்றவுடன், அவரது வாழ்க்கையிலே ஒரு லக்ஷியம்

குடிகொண்டிருந்தது. எப்படியாவது வர்த்தகம் செய்து பொருளீட்ட வேண்டுமென்ற ஆசை பிறந்தது. எல்லோரும் செய்கிற வழக்கமான தொழிலை அவர் எப்போதுமே செய்ய விரும்புவதில்லை. ஏதாவது புதுமையாக இருக்கவேண்டும். இந்தப் புதுமை விருப்பம்தான் துரைசாமியை எதிர்காலத்தில் உலகமே போற்றும் விஞ்ஞானி அறிஞர் ஜி. டி. நாயுடு என்று போற்றும்படியான நிலைக்கு வந்தது என்றும்கூட தைரியமாகச் சொல்லலாம். அந்தக் காலத்திலே அமெரிக்காவிலுள்ள பார்க்டேவிஸ் கம்பெனியார் தயாரிக்கும் 'வலி நிவாரணி' என்ற மருந்தை வரவழைத்து கிராமத்தில் வியாபாரம் செய்தார். இப்பொழுது துரைசாமி ஒரு குட்டி வைத்தியரானார். சிறிது வருவாயும் கிடைத்தது. தலைவலி கால்வலி, வந்தவர்களெல்லாம் துரைசாமியை நோக்கிப் படையெடுக்கலானார்கள். ஏழைகளுக்கு இலவசமாகவும் மருந்து கொடுத்தார். இந்த வைத்தியம் பார்த்த அட்டவணையில் பெண்களின் எண்ணிக்கைதான் அதிகம். அதில் ஒரு ரகசியம் இருக்கிறது! துரைசாமிக்கு யெவனம் பூத்துக் குலுங்கும் இளம் பருவம். இயற்கையாக அமைந்த சிகப்பு மேனி, சேவா மனோபாவம், சகஜமாகப் பழகும் சுபாவம், ஆகிய இவைகளைக்கண்ட இளம்பெண்கள் தங்கள் கற்பனையில் வேறுவிதமாக நினைத்தார்கள். 'உடம்புவலி' என்று நடித்துக் கொண்டு உள்ளத்து வலியை, தீர்க்க வந்த வனிதையர் அநேகர். ஆனால் துரைசாமி ஒழுக்கம் குன்றாத இளைஞர். தன்னைப் பாதுகாத்துக் கொண்டார் அது மாத்திரமா! அப்படி வழி தவறி நடக்கும் பெண்களை நல்வழியில் திருப்பப் புத்திமதியும் கூறினார். இதற்காக ஒரு சிறு இயக்கத்தையே ஆரம்பித்தார். சில தொண்டர்களைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு அப்படிப்பட்ட பெண்களைக் கண்டு பரிகசிப்பது, உறவினர்களிடம் நடத்தையைப்பற்றிப் புகார் சொல்வது இப்படியாக பலவகையில் கலங்கல் கிராமத்தை களங்கமில்லாமல் செய்தார்.

இதற்குமுன்பே துரைசாமிக்கு தமிழின்பேரில் ஆர்வம் பிறந்தது. தன் சுய முயற்சியால் இராமாயணம், பாரதம், சிலப்பதிகாரம், தொல்காப்பியம் முதலிய தமிழ் நூல்களையெல்லாம் படித்து வந்தார்.

ஒரு நல்ல நாளிலே துரைசாமிக்குத் திருமணம் செய்து வைக்க உறவினர்களெல்லாம் முடிவு செய்தார்கள். செல்லம்மாள் என்பவரை பெண் பார்த்து விட்டார்கள். திருமண நாளும் வந்தது. கொட்டு முழக்கம் எல்லாம் முழங்கிற்று. உறவினர்களெல்லாம் வந்து சேர்ந்தார்கள். முகூர்த்த நேரமும் நெருங்கியது. ஆனால் துரைசாமியை மாத்திரம் காணவில்லை. எங்கும் ஒரே பரபரப்பு! மாப்பிள்ளையைக் காணோம்! மாப்பிள்ளையைக் காணோம்! என்று ஒரே முணுமுணுப்பு. காரணம் என்ன தெரியுமா? அந்தக் காலத்திலேயே துரைசாமி சீர்திருத்த இளைஞராக விளங்கினார். சம்மதம் தெரியாமல் திருமணம் முடிப்பது மூடப்பழக்கம் என்று கருதினார். தன் எதிர்பைக் காட்டுவதற்காகத்தான் மறைந்திருந்தார். எப்படியோ துரைசாமியைக் கண்டுபிடித்து விட்டார்கள். குருட்டுச் சடங்குகளில்லாத திருமணம்தான் செய்ய வேண்டுமென்று பிடிவாதம் செய்தார். அதன்படியே திருமணமும் நிறைவேறியது. அப்பொழுது துரைசாமிக்கு வயது இருபதுதான்.

தோட்டத்திலே துரைசாமி இருந்துவந்தபோது ஒரு நாள் லங்காஷயர் என்ற ஆங்கிலேயர் மோட்டார் சைக்கிள் வாகனத்தில் அங்கு வந்து சேர்ந்தார். வண்டியை நிறுத்தி ஏதோ பழுது பார்த்துக் கொண்டிருந்தார். துரைசாமிக்கு இந்த வண்டியின் பேரில் ஒரேகண். அந்த மாதிரி ஒரு மோட்டார் சைக்கிள் தன் வாழ்நாளில் ஒன்று வாங்கித்தான் ஆக வேண்டும் என்று முடிவு செய்தார். இதற்காக கோயமுத்தூருக்குப்போய் கடைசியில் ஒரு ஹோட்டலில் போய் சேர்ந்தார். துரைசாமிக்குச் சாப்பாடு போட்டு மாதம் மூன்று ரூபாய் சம்பளம் கொடுக்க இசைந்தார்கள். துடைக்கும் வேலைதான். இப்படி மூன்றாண்டுகள் கடந்தன. இந்த மூன்றாண்டுகளில் துரைசாமி சிக்கனமாகக் கொஞ்சம் ரூபாய்கள் சேர்த்திவைத்திருந்தார். அந்த மோட்டார் சைக்கிளை அவர் மறக்கவேயில்லை. தன்னிடமுள்ள பணத்தைக்கொண்டு முன்பார்த்த- அந்த-லங்காஷயருடைய மோட்டார் சைக்கிளையே வாங்கினார். அதைப் பிரிக்கவும், பூட்டவும் இப்படியுமாகச் சில நாட்களில் ஒரு மெக்கானிக்காக மாறினார். சுயமாக ஒரு வியாபாரம் செய்யவேண்டுமென்ற எண்ணம் தூண்டியது. பருத்தி வியாபாரத்தைத் துடங்கினார் வழக்கம்போல் நஷ்டமும் லாபமும் கிடைத்தது. பழையபடி எங்காவது வேலைக்குச் சேர விரும்பினார். சிங்காநல்லூர் ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் ஒண்டிப்புதூரில் ஒரு ஜின்னிங் பேக்டரியில் உணவு அல்லது மாதம் பன்னிரண்டு ரூபாய் சம்பளத்திற்குச் சேர்ந்தார். இதில் சில காலம் இருந்து, கொஞ்சம் சேமித்து வைத்திருந்ததுடன் நாணயத்தை அடகு வைத்து இரவலாகவே சிலருடைய ஒத்தாசை கொண்டு ஒரு ஜின்னிங் பேக்டரியைத் திருப்பூரில் துவக்கி சொந்தமாக நடத்தினார். லாபம் எதிர்பார்த்ததற்கு மேல் கிடைத்து வந்தது. காலம் ஒத்துக் கொண்டது. திடீரென்று சுமார் ஒரு லக்ஷத்து ஐம்பதினாயிரம் ரூபாய் அளவில் சம்பாதித்துவிட்டார். அப்பொழுது துரைசாமி ஒரு தேசபக்தர். அதனால் அவ்வப்பொழுது வடநாட்டில் நடக்கும் அகில இந்தியக் காங்கிரஸ் மகாநாட்டிற்குப் போய் வருவார். பம்பாயில் பஞ்சு வியாபாரம் செய்து ஒரேயடியாகப் பணத்தை அடித்துத் தள்ளிவிடலாம் என்ற ஆசை பிறந்தது. அவ்வளவுதான், பழைய கருப்பனே கருப்பன் என்ற நிலையில் படுநஷ்டமடைந்தார். மீண்டும் வேலை தேடும் படலம் ஆரம்பமாயிற்று. ஸ்ரீ ராபர்ட் ஸ்டேன்ஸ் என்ற பஞ்சாலை அதிபர் ஒருவர் துரைசாமிக்கு நாலாயிரம் ரூபாய் உதவி செய்து மோட்டார்த் தொழிலைத் துவக்கும்படி உபதேசித்தார். 1920-ல் மோட்டார்த் தொழிலை துவக்கினார். மோட்டார் முதலாளியும், மோட்டார் ஓட்டியும், சகலமும் துரைசாமியேதான். திண்டுக்கல்—பழனி—பொள்ளாச்சி உடுமலைப்பேட்டை மார்க்கமாக பஸ் ஓட ஆரம்பித்தது. இவருக்கு துணையாக L. R. G. நாயுடுவும் கண்டக்டராக இருந்தார். இவர்தான் திருப்பூர்—கரூர்—அந்தியூர் V. M. S. என்ற சர்வீசை நடத்தி வருபவர் அமோகமான வெற்றி. காருக்குமேல் கார். வளர்ச்சிக்குமேல் வளர்ச்சி. 1930-ம் ஆண்டில் துரைசாமிக்குச் சொந்தமான பஸ்களின் வளர்ச்சி தெரியுமா? நூறு பஸ்களுக்கு மேல் இருந்தன. 1935-ல் சுமார் 200-பஸ்களுக்குமேல் இருந்தன. சுமார் 15000 மைல் அளவுக்கு அவரது பஸ் மார்க்கங்கள். சுமார் 10000-க்கு மேற்பட்ட தினசரி பிரயாணிகள். துரைசாமிக்கு கீழ் 1000 ஊழியர்கள். சிப்பந்திகளுக்கு மாம்த

17000 ரூபாய் சம்பளம் பட்டுவாடா. யூ. எம். எஸ். (United Motor Sarvice) என்றால் உலகமே தெரியும். இப்பொழுதுதான் ஜி. டி. நாயுடுவாக மாறுகிறார்.

தோழர் ஜி. டி. நாயுடு அவர்கள் தமது யூ. எம். எஸ். பஸ் ஸ்தாபனத்தை அமெரிக்க முறையில் மிக ஒழுங்காக நடத்தி வந்தார். தம்மிடம் வேலை பார்ப்பவரிடம் கறார் கண்டிப்பாக இருப்பார். காலதாமதமாக வரும் ஊழியர்களைக் கண்டிப்பார். கடமை தவறாத ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு தருவார். ஆபீஸ் நேரங்களில் அவரைக் காணச் சென்றால், விசாரணை அறையில் உள்ள ஒருகுமாஸ்தா, டெலிபோன் மூலமாக நாயுடு அவர்களுக்குச் செய்தி அனுப்பி, நாம் மாடிக்குச் செல்லச் செல்ல கதவுதானே திறக்கும். புன்முறுவலோடு நம்மை வரவேற்பார். அறிஞர் ஜி. டி. நாயுடு அவரது ஆபீசில் உள்ள ரிசீவரில் தம் ஸ்தாபனத்தில் நடக்கும் சகல செய்திகளும் வந்துகொண்டேயிருக்கும். சதாவதானிபோல் அனைத்தையும் கவனித்துக்கொண்டேயிருப்பார். பொழுதெல்லாம் உழைத்து அவர் விஷேசித்த நண்பர்களுக்கு இரவு 1-மணிக்குமேல் பேட்டி தருவார். மாறுவேடம் போட்டு தமது பஸ்ஸில் வேலை செய்யும் ஊழியர்களைத் தாமே சோதிப்பார். தமது பஸ் ஸ்தாபனத்தில் என்ன செய்து என்ன பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய ஆம்ப்லிகால் (amply call) என்ற கருவியை வைத்திருக்கிறார். அதன்மூலம் விஷயம் தெரிந்து குறைகள் இருப்பின் அதை நிவர்த்திசெய்து மென்மேலும் ஸ்தாபனத்தை வளர்ச்சியடையச் செய்தார்.

அவருடைய கடிதத் தொகுப்புகள் படிப்பதற்கு மிகவும் ருசிகரமானது அந்தத் தொகுப்புகள் எல்லாம் சுமார் இருபதினாயிரம் கட்டு (file) களில் அடங்கியிருக்கின்றன. அந்த பைல்களின் தலைப்பு மிக விசித்திரமானவை. A. C. F. R. என்ற பைல்களும் இருக்கின்றன A. என்றால் (Appreciation) பாராட்டு, C. என்றால் (courtesy) மரியாதை, F. என்றால் (flattery) முகஸ்துதி, R. என்றால் (reality) உண்மை என்பது. தமது நண்பர்களிடமிருந்துவரும் கடிதங்களை இவ்வாறாக பிரித்திருக்கிறார்.

திரு. நாயுடு அவர்கள் சமதர்ம நோக்குடையவர். 1927-ம் ஆண்டிலே எல்லா பஸ்களையும் தமது சிப்பந்திகளுக்கே இலவசமாக கொடுத்துவிடுவது என்று முடிவு கட்டி, பரீட்சார்த்தமாக ஒரு டிரைவருக்கு ஒரு பஸ் வீதம் — சில பேர்களுக்குக் கொடுத்துப்பார்த்தார். அதையவர்கள் திறமையாக நடத்தவில்லை. தொழிலாளர்கள் இன்னும் பக்குவம் அடையவில்லை என்று அந்தத் திட்டத்தை நிறுத்தி விட்டு இப்பொழுது அதை வெற்றிகரமாக செய்திருக்கிறார்.

1931-ம் ஆண்டு உலகம் எங்கும் பணமுடை! எந்த தொழிலாளரையும் தமது ஸ்தாபனத்திலிருந்து நிறுத்தாமல் நஷ்டத்திலேயே பஸ் கம்பெனியை நடத்தி வந்தார். அவர் தமது ஸ்தாபனத்தை 1938-ல் ஜில்லா போர்டுகளுக்கும், முனிசிபாலிட்டிகளுக்கும் ஒப்படைத்து, அதனால் அவர்கள் நல்ல ஊதியத்தை அடைந்து, தொழில் கல்லூரிகள் நடத்தும்படி உபதேசித்தார். ஆனால், ஜில்லா போர்டுகளாவது - முனிசிபாலிடியாவது இதை எடுத்து நடத்த முன்வரவில்லை.

இந்தியாவிலேயே எங்கும் கண்டிராத ஒரு பெரிய பஸ் ஜங்ஷனை பல்லடத்தில் நிர்மாணித்தார். 1938-ல் மந்திரி V. V. கிரி வேண்டுகோளுக்கிணங்கி நேஷனல் பிளானிங் கமிட்டியில் அங்கம் வகித்தார். 1937-ம் ஆண்டில் எலெக்ட்ரிக் மோட்டார் (Electric Motor) உற்பத்தி செய்யும் தொழிற்சாலையைத் தோற்றுவித்தார். ஸர். ஜார்ஜ் போக் 1939-ம் ஆண்டில் அதைத் திறந்து வைத்தார். அதே ஆண்டில் ரேடியோ பெட்டிகள் செய்யும் தொழிற்சாலையை ஆரம்பித்தார். அதை R. K. ஷண்முகம் செட்டியார் அவர்கள் 1941-வது ஆண்டில் திறந்து வைத்தார். ஆர்தர்ஹோப் பாலிடெக்னிக் (Arthorhope Politechnic) என்ற எஞ்சினீயரிங் கல்லூரியை ஏற்படுத்தினர். அதற்கு அவரே ஆசிரியராகவும் இருந்தார். ஆட்டோமோபைல் (Automobil) சம்மந்தமாக அவர் செய்யும் பிரசங்கத்தைக் குறிப்பு எடுப்பதற்காக இங்கிலாந்தில் உள்ள ஒரு கம்பனி ஒரு ஆளை நேரடியாகக் கோவைக்கு அனுப்பி குறிப்பு எடுத்துக்கொண்டு போனார்கள் என்றால், அவரை அயல் நாடு எப்படி மதித்திருந்தது என்பதை சொல்லவும் வேண்டுமா? அப்படிப்பட்ட அறிஞர் ஜி. டி. நாயுடு நமது நாட்டைச் சார்ந்தவர். நம் கண் முன் நிற்கின்றார். இது நமது பாக்யமல்வா.

லங்காஷயர் வைத்திருந்த மோட்டார் சைக்கிளைக் கண்டு அதிசயித்த நாள் முதல பல இயந்திரங்களை ஆராய்ந்து தானே இயங்கும் மின்சார க்ஷவரக் கத்தியை கண்டுபிடித்தார். உலகமெங்கும் இதற்குப் பெரிய பாராட்டு. 1936-ல் பஸ்களின் அதிர்ச்சியை சோதிப்பதற்கான ஒரு யந்திரமும், பிலிம் கேமராக்களுக்குரிய டிஸ்ட்டென்ஸ் அட்செஸ்ட்டரையும் (distance adjuster) கண்டு பிடித்தார். தேர்தல் காலங்களில் பித்தலாட்டங்கள் நடைபெறாமலிருக்க ஓட் பதிவு செய்யும் இயந்திரம ஒன்றையும் கண்டுபிடித்தார்.

இந்தியாவில் ரேடியோ பெட்டிகள செய்து மிக இலகுவான விலையில் ஒவ்வொரு ஏழையும் வாங்கி அனுபவிக்கச் செய்ய வேண்டும் என்பது அவரது அவா. சண்டையில் ஈடுபட்டிருந்த அரசாங்கம் அத்தனைக்கும் இடைஞ்சல் செய்தது. நாயுடு அவர்கள் தம்மால் கண்டு பிடிக்கப்பட்ட எதையும் தமக்கு உரிமை (Patent) செய்து கொள்வதில்லை. யாரும் அதைச் செய்து லாபம் பெற வேண்டும் என்பது தான் அவரது நோக்கம். 1940-ல் ஒரு அமெரிக்கர் நாயுடுவுக்கு "தங்கள் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய அமெரிக்கா தான் ஏற்ற இடம். அவைகளை நாங்கள் வாங்கிக் கொள்கிறோம்" என்று எழுதுகிறார். மற்றும் ஒரு அமெரிக்கர் நாயுடு அவர்கள் கூறிட ஒரு சிறு யோசனையால் மாதத்திற்கு இரண்டாயிரம் டாலர்கள் காப்பாற்றப்பட்டன என்று எழுதுகிறார். இன்னுமொரு அமெரிக்கக்கம்பெனியார் யூ. எம். எஸ் க்ஷவரக் கத்திகளை தங்கள் நாட்டில் உற்பத்தி செய்யும்படியும், அதற்காக நாயுடவர்களுக்கு மாதம் 3000 டாலர் சம்பளம் கொடுப்பதாகவும் எழுதுகிறார். அந்த வேண்டுகோளை நாயுடு மறுத்து விட்டார். ஏன்? இந்த நாட்டிலே அவைகளைச் செய்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து இந்த நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த எண்ணினர். இதுவன்றோ நாட்டுப்பற்று! நாயுடு அவர்களின் சக்தியையும், அறிவையும் இந்த நாடு இன்னும் அறியவில்லை. அவரது திறமையை இந்த நாடு பயன்படுத்தினால் பொன்னாடாக விளங்கும். அந்த நாள் எந்நாளோ?

1928-ல் குயன்ஸ்என்னும் ஜெர்மன் வர்த்தகர் திரு, ஜி. டி. நாயுடு அவர்களுக்குக் கோவையில் பழக்கமானர். பிறகு அவர் ஜெர்மன் சென்று நாயுடு அவர்களுக்கு கிருஸ்த்மஸ் வாழ்த்துக்களை அனுப்பி தங்கள் நாட்டுக்கு வந்து போகும்படி அழைப்பும் அனுப்பினர். அதன் மேல் 1932-ல் முதல் முதலில் நாயுடு அவர்கள் கொழும்பு மார்க்கமாகக் கடற் பிரயாணத்தில் ஐரோப்பா புறப்பட்டார். செல்லும் வழியிலே கப்பல் கோ

விபத்துக்குட்பட்டு தீக்கிரையாகியது. சிலர் கடலில் மூழ்கினர். சிலர் லைப் (Life) போட் மூலம் தப்பியோடினர். ஓர் ஆங்கில மாதும், சீனமாதும் நாயுடுவால் காப்பாற்றப்பட்டார்கள். ரஷ்யதேசத்து எண்ணெய்க்கப்பலின் உதவியைக் கொண்டு டிஜி பௌட்டி (Digi bouti) என்னும இடத்துக்கு சென்றார்கள். அதன் பிறகு மாசேல்ஸ் சென்று - ஜர்மனி முழுவதும் சுற்றிப் பார்த்துவிட்டு இங்கிலாந்தில் லண்டன், பர்மிங்ஹாம், மான்செஸ்டர் முதலிய நகரங்களைப்பார்த்துவிட்டு பிறகு அமெரிக்கா சென்றார். இப்படியே உலகம் முழுவதும் சகல தேசங்களையும் சுற்றுப் பிரயாணம் செய்தார். குறிப்பாக அமெரிக்காவில் மோட்டார் நிபுணர்களையும், விஞ்ஞானிகள் பலரையும் சந்தித்தார். பல அமெரிக்க நிருபர்கள் நாயுடு அவர்களைச் சூழ்ந்து கொண்டு இந்தியாவைப் பற்றிய விபரங்களைத் தெரிந்து கொண்டனர். பிறகு ஜப்பான், மஞ்சூரியா, கொரியா, மங்கோலியா, சைனா, இந்தோ சைனா, மலாய், சிலோன் முதலிய நாடுகளுக்கு விஜயம் செய்தார். இந்த மேல் நாட்டுப் பயணத்தில் ஐரோப்பியப் பெண்கள் பலர் நாயுடுவைத் தம் வலையில் சிக்க வைக்க முயற்சித்தனர். தாய் நாட்டை விட்டுப் புறப்படுவதற்கு முன்னரே மாமிசம், மது, மாது ஆகிய மூன்றையும் தீண்டேன் என்ற இலட்சியத்தோடு சென்ற அவரா எளிதில் சிக்கிவிடுவார்? நாயுடு அவாகள் படாடோபமான வரவேற்பை விரும்புகிறவர் அல்ல. அவர் மேல் நாட்டு பயணம் முடித்து திரும்பி சென்னை வரும் போது எழும்பூர் நிலயத்தில் அவரை வரவேற்க மாலையுடன் நண்பர்கள் காத்திருந்தனர். இதனை முன் கூட்டியே அறிந்து நாயுடு அவர்கள் அதற்குப் பின் புறப்பட்ட டிரெயினில் வந்து இறங்கினார்கள். இருந்துங்கூட எப்படியோ இவரிடம் ஸ்காலர்ஷிப் வாங்கிய மாணவர்கள் வந்து கண்டு களித்தனர். நாயுடுவின் வாழ்க்கையில் எத்தனையோ ஆபத்துகள் எதிர்பாராது வந்திருக்கின்றன. ஒரு சமயம் லண்டனில் அவர் ரயிலில் போகவேண்டியிருந்தது. ஆனால் தற்செயலாக அந்த ரயில் அவருக்குக் கிடைக்கவில்லை. சென்ற ரயில் பெரும் ஆபத்துக்குள்ளாகி பலர் மாண்டனர். அவர் சீனா சென்றிருந்த போது பீக்கிங்கிலிருந்து கோபிப் பாலைவனத்திற்கு போகும் வழியில் திருடர்கள் பலர் அவரை வளைத்துக் கொண்டார்கள். எனினும் சுற்றப் பிரயாணத்தால் பல அரிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணம் அவரைத் தூண்டியது. அதனால், இரண்டாவது தடவையும் ஐரோப்பா புறப்பட்டார். இந்தத் தடவையும் இவருக்கு அமோகமான வரவேற்பு கிடைத்தது. நாயுடு அவர்கள் எப்போதும் ஒரு கேமிராவைத் துணைக்கு எடுத்து செல்வார். தாம் பார்க்கும் அதிசயம் அனைத்தும் படம் எடுத்துக்கொள்வார். லண்டன்மாநகரில் உள்ள தபால்காரர்களின் திறமையைப் பரிசோதிப்பதற்காகத் தமக்குத் தாமே G. D. நாயுடு, லண்டன் W. C. என்று எழுதி தபாலில் சேர்த்து விட்டார். குறித்த காலத்தில் திரு. நாயுடு அவர்களுக்கே அந்தக் கடிதம் வந்து சேர்ந்தது.

ஒரு சமயம் நாயுடு அவர்கள் லண்டனில் தமது சேமிரா பெட்டியை எங்கோ நழுவ விட்டுவிட்டார். ஆனால் என்ன ஆச்சரியம்! "இழந்த பொருள்கள் காரியாலயம்" அதை நாயுடு அவர்களிடம் கேட்டவுடன் கொடுத்துவிட்டார்கள். ஒரு சமயம் அவர் இந்தியாவிற்கு ஐந்து நிமிஷத்திற்குரிய கட்டணத்தை செலுத்தி டிரங் டெலிபோன் மூலம் பேசினார். ஆனால் அவர் பேசியதோ மூன்று நிமிஷந்தான். இரண்டு நிமிஷத்திற்குரிய தொகையை வாபஸ் செய்யும்படி டெலிபோன் கண்ட்ரோலருக்குக் கடிதம் எழுதினார். பணமும் வாபஸானது. அந்தப் பணத்தை டெலிபோன் தொழிலாளர் கஷ்ட நிவாரணத்திற்கு அன்பளிப்பாக அளித்துவிட்டார். இம்மாதிரியாக நாயுடு வாழ்க்கையில் எத்தனையோ விசித்திர நிகழ்ச்சிகள்!

ஜெர்மனியில் இருக்கும் போது நாயுடு அவர்கள் ஹிட்லரை நேரில் சந்தித்துப் போட்டோ எடுத்துக்கொண்டார். அந்த போட்டோவில் ஹிட்லரின் கையொப்பத்தையும் பெற்றுக்கொண்டார். மறுநாள் 'டசல்டார்ப்' என்ற இடத்திலுள்ள ஹிட்லரின் சேனையை நாயுடு அவர்கள் படமெடுத்தார். அந்நிய நாட்டு உளவாளியோ என்று நாயுடுவை கைது செய்தார்கள். பிறகு விவரம் தெரிய விடுவிக்கப்பட்டார்.

1935-ல் ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் காலமான போது நாயுடு அவர்கள் லண்டனில் இருந்தார். அந்தப் பிரேத ஊர்வலத்தைப் படமாகப் பிடித்துக்கொண்டார். மற்றொரு முறை எட்டாம் எட்வர்டு மன்னர் காக்ஷி சாலைக்குப் போகும் போது அதையும் படமாகப் பிடித்துக் கொண்டார். பொதுவாக ஒவ்வொருவரும் ஒரு துறையில் ஆர்வம் கொண்டிருப்பார்கள். ஆனால் நாயுடு அவர்கள் எல்லா கலையும் தெரிந்து கொள்ளும் ஆர்வமுடையவர். பண்டிட் நேரு அவர்கள் கமலா நேருவுன் சிகிட்சைக்காக 'பேடன்வீலர்' என்னும் இடத்தில் தங்கியிருக்கும் போது, நாயுடு அவர்கள் நேருஜியையும், கமலாவையும் படம் பிடித்தார். அந்தப் படத்தில் நேருஜியின் கையெழுத்தையும் பெற்றார். இன்னும் லண்டனில் நேருஜி கலந்த வைபவங்களையும் படம் எடுத்துக் கொண்டார்.

1939-ம் ஆண்டில் மூன்றாவது தடவையாக கோயமுத்தூரிலுள்ள பிரபல டாக்டர் C. S. ராமசாமி அய்யரோடு ஐரோப்பா சென்றார். இந்தத் தடவை இவர் பெரும்பாலும் கண் காக்ஷிகள் பார்த்து அறிய விஷயங்கள் சேகரிப்பதிலேயே பொழுதைப் போக்கினார் 1940 ஜனவரி மாதம் ஒரு தொழிற் பள்ளியில் மாணவராக சேர்ந்தார் அந்தப் பள்ளியின் மூலம் வாரம் 16 டாலர் கிடைத்தது. அப்பொழுது அவருடைய வயது 47. பள்ளியில் படித்த நேரம் போக மீதி நேரங்களில் அமெரிக்காவிலுள்ள பல இடங்களில சொற்பொழிவாற்றினார். ஒரு சமயம் நாயுடு அவர்கள் பெண்கள் கட்டமொன்றில் அமெரிக்க நாகரீக சிகையலங்காரமும், அழகிய ஆடைகளும், பௌடர் பூசிய முகமும் ஒருக்காலும் அழகையுண்டாக்காது. உன்னுடைய மனதிலே நீ ஒழுங்காயும், உண்மையாகவும், பெருந்தன்மையாகவும் இருப்பதுதான் இயற்கையான அழகு' என்று பேசினார். நாயுடு அவர்களுக்கு வசிய (*hypnotism*) ஞானமும் உண்டு. மேல் நாட்டில் ஒரு தடவை ஒரு பாம்பை வசியப் படுத்தினார். இவர் ஒரு பக்கமாக நகர்ந்தால் பாம்பும் அப்பக்கமே நகரும். இதைக் கண்ட மேல்நாட்டவர் அதிசயித்தனர். கோவையிலும் ஒரு தடவை இவரது அலுவலகத்தில் ஒரு பாம்பு வர அதை வசியப்படுத்தி ஒரு பானைக்குள் புகுத்தி வெளியே கொண்டு விட்டு விட்டார்.

நாயுடவர்கள் ஜோசியத்தை மிக ஊக்கமாக ஆராய்ச்சி செய்திருக்கிறார் அறிவையும் உண்மையான அனுபவத்தையும் வைத்து ஆராய்ந்ததில் ஜோசியத்திற்கும், ஜன சமூகத்திற்கும் ஒரு சம்பந்தமும் இல்லை என்பதைக் கண்டார். ஜோசியம் என்பது நாவல் போன்ற கதைகள் தான். அந்தக் கதைகளை விட இந்த ஜோசியம் பார்ப்பது 100 மடங்கு அதிக கெடுதல் செய்யும். அதிர்ஷ்டத்தில் அவருக்கு நம்பிக்கையில்லை. அப்படி ஒன்று இருந்தால் அதை நாமே உண்டாக்கி கொள்ளுகிறோம் என்பது அவருடைய எண்ணம்.

சிகாகோ ஹோட்டல் ஒன்றில் தங்கியிருக்கும் போது நான்கு பெண்கள் குடித்து விட்டு வெறியோடு நாயுடு

அவர்களை பலாத்காரமாக இச்சிக்க விரும்பினர். இந்த ஆபத்திலிருந்து நாயுடு தப்பித்துக்கொண்டார். குடிவெறி நீங்கிய அப்பெண்கள் நாயுடுவிடம் பிற்பாடு மன்னிப்பு கேட்டுக்கொண்டனர். அதில் ஒருத்தி நாயுடுவை திருமணம் செய்து கொள்ள விரும்புவதாக தன் எண்ணத்தையும் கடிதம் மூலம் தெரிவித்துக் கொண்டாள். அதற்கு நாயுடவர்கள் 'இந்தியர்களுடைய பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொள்ளாமல் இந்தியரை மணக்கக்கூடாது" என்று கடிதம் எழுதிவிட்டார்.

நாயுடவர்கள் அமெரிக்காவில் தங்கியிருக்கும் பொழுது அன்றுடப் பத்திரிகை நிருபர்கள் அவரைப் பேட்டி கண்டு வந்தார்கள். நாயுடவர்களைப் பற்றிய செய்திகள் வராத அமெரிக்கப் பத்திரிகைகளே இல்லை. அப்பொழுது யுத்த கால மாதலால் நாயுடு தமது செலவிற்காக அதிக பணம் வரவழைக்க முடியாமல் போயிற்று. அங்கு ஏராளமான இயந்திரச் சாதனங்களை வாங்கிக் கொண்டு 1940-ம் ஆண்டு இறுதியில் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். கொச்சித் துறைமுகத்தில் வைத்து அவரது மூட்டை முடிச்சுகளை எல்லாம், ஐந்து நாள் சோதனை போட்டனர். தமது நண்பர்கள் எழுதிய 37,000 கடிதங்களைப் போலீஸ் இலாகா பிரித்துப் படித்தனர். நாயுடு அவர்களை யாரோ சிலர் ஜெர்மன் உளவாளி என்று திரித்துக் கூறியதால், வந்த விளைவு தான் இந்தச் சோதனை. நாயுடவர்களைப் பிராமணத் துவேஷி என்றும் இவரை பிராமணப் பிரியர் என்றும் விவரம் தெரியாதவர்கள் கூறுதல் உண்டு. அவருக்கு எந்த வகுப்பின் பேரிலும் துவேஷம் இல்லை. ஜாதியைப்பற்றிய நம்பிக்கையே அவருக்கு கிடையாது. ஏன்? லண்டனில் படிக்க ஜாதி வித்தியாசமின்றி பிராமணர், தமிழர், வங்காளி உள்பட அநேகருக்கு அவர் படிப்பு முடியும்அளவு உபகாரச் சம்பளம் கொடுத்துவந்தார். இந்த மாதிரி உதவி பெற்றவர் அநேகர் இன்றும் சென்னையிலும், கோயமுத்தூரிலும் இருக்கிறார்கள். நாயுடு ஒரு அரசியல் வாதியல்ல. அவர் ஒரு தொழில் நிபுணர். கண்டுபிடிப்பாளர்.

ஒரு காலத்தில் நாயுடவர்கள் பழனி முனிசிபல் கவுன்சிலில் மோட்டார் தொழிலாளர்களால் அங்கத்தினராகவும் இருந்திருக்கிறார். அதே மாதிரி கோவை முனிசிபாலிடியிலும் இருந்திருக்கிறார். நாயுடு அவர்கள் பட்டம் பதவியை வெறுக்கக் கூடியவர். 1946-ல் சென்னை கவர்னராக இருந்த சர். ஆர்தர்ஹோப், நாயுடு அவர்களுக்கு 'நைட்வுட்' அதாவது 'சர்' என்ற பட்டத்தை ஏற்க வேண்டினார். நாயுடு ஏற்க மறுத்துவிட்டார். சர். பட்டத்துக்கு கொஞ்சமேனும் மதிப்பு கொடுப்பவர் நாயுடு அல்ல. நாயுடு அவர்கள் தாராள சிந்தையுடையவர். 'ஆர்தர்ஹோப்' இஞ்சினீயர் காலேஜ், "ஆர்தர்ஹோப் பாலிடெக்னிக்", "ஆந்திராயுனிவர் சிட்டி", "பச்சையப்பன் கல்லூரி", ராமகிருஷ்ண வித்யாலயம் முதலிய ஸ்தாபனங்களுக்கு நிறைய பொருள் உதவி செய்திருக்கிறார். ஆதலால் அன்றைய கவர்னர் ஆர்தர்ஹோப், நாயுடு அவர்களை இந்தியாவின் 'நப்பீல்டு' (Lord Nuffields of India) பிரபு என்ற பட்டப் பெயருடன் அழைத்தார். பிறகு நாயுடு அவர்களுடைய வருமான வரித் தகராறு ஆரம்பமாகிறது. இது ஒரு பெரிய கதை.

1946-ல் கோவை வருமான வரி ஆபீசில் இருந்த ஒரு ஆபீசருக்கும் ஸ்ரீ நாயுடு அவர்களுக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு, அதன் விளைவாக, தொழில் அபிவிருத்திக்காக வைத்திருந்த திட்டங்களை விட்டு விட்டு இந்த விவகாரத்தில் அவருடைய அருமையான காலம் வீணாக்கப்பட்டு வருகிறது. நாயுடுவை 'வரி கொடாதவர்' என்று சிலர் சொல்லுவார்கள். ஆனால் உண்மையில் இந்த ஜில்லாவில் அநேக வருஷங்களாக அதிக வரி கொடுத்தவர்களில் இவர் தான முதன்மை ஸ்தானம் பெற்றவர். அநேக வரிகளை எல்லாரும் அனுசரிக்கும் வழக்கத்துக்கு சரி விரோதமாக முதலிலேயே கட்டி வந்திருக்கிறார் என்பதை ரிகார்டுகளில் பார்க்கலாம். ஆனால் லஞ்ச வரிகள் கொடுத்ததில்லை. கொடுக்கிறதில்லை. கொடுக்கப் போவதும் இல்லை. இது தான் விவகாரம். இதை இங்கு விவரிக்க வேண்டியதில்லை. வருமான வரியைக் கொடுக்காமல் ஏமாற்றுகிறார் என்பதும் முழுதும் பொய். ஞாயத்திற்கு புறம்பான முறையில் எதையும் நாயுடு அவர்கள் செய்ய விரும்பமாட்டார்.

நாயுடு அவர்கள் விளையாட்டுப் பிரியர். ஒரு சமயம் அவரது நண்பர் திவான் பகதூர் C. S. ரத்தினசபாபதி முதலியார் அவர்கள் தேநீர் விருந்திற்கு தமது நண்பர்களை எல்லாம் அழைப்பது போல் தாமே அச்சடித்து முதலியார் அவர்களுக்குத் தெரியாமலே தாமே பல பிரமுகர்களுக்கு விநியோகித்து விட்டார். அன்று மாலை முதலியார் பங்களாவில் ஒரே விருந்தினர் கூட்டம்! முதலியார் திகைத்தார். பிறகு நாயுடு அவர்களின் திருவிளையாடல் என்று தெரிய வந்தது. எல்லோரையும் நாயுடு அவர்கள் தமது இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே முன்னேற்பாடாகவே தேநீர் தயார் செய்து வைக்கப்பட்டிருந்தது. விருந்தும் இனிது நடந்தது. இம்மாதிரி அவரது வாழ்க்கையில் எத்தனையோ நிகழ்ச்சிகள்! 1944-ல் நாயுடு அவர்களின் புதல்வி திருமதி சரோஜினிக்கும், மணமகன் திரு. பாலகிருஷ்ணனுக்கும் திருமணம் நடை பெற்றது. திருமணம் சீர்திருத்த முறையில் அர்த்தமற்ற சடங்குகள் இல்லாமல், மிக மிகக் குறைந்த செலவில் நடைபெற்றது. சம்பிரதாயப்படி திருமணத்திற்கு வந்தவர்களுக்கு தேங்காய், பழம் வழங்கப்படவில்லை. மாங்காய்ப் பழம் தான் வழங்கப்பட்டது. எல்லாம் விசித்திரம்! 1927-ல் நாயுடு அவர்கள் ரங்கநாயகி அம்மாள் என்பவரை மணந்து கொண்டார். முதல் தாரம் திருமதி செல்லம்மாளுக்கு இரண்டு பெண்கள். அவர்களுக்கும் மணமாகிவிட்டது. இரண்டாம் தாரத்திற்கு ஒரு பையன். அவனுக்கு இப்பொழுது வயது 11. இந்தக் குட்டிப் பையல் எதிர் காலத்தில் என்ன செய்வானோ? "அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறக்கும்" என்ற பழமொழி பொய்த்தாவிடும்? பிறகு 1944-ம் ஆண்டு தமது போக்குவரத்து கம்பெனியிலிருந்து விலகி தொழிற்சாலை உற்பத்தியில் பாடுபட்டு வந்தார்.

இன்னும் தனிப்பட்ட நபர்கள் நாயுடு மூலமாக எத்தனையோ உபகாரங்களைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களின் பெயர் வரலாற்றில் இல்லை. நாயுடு வாய்விட்டு சொல்லவும் மாட்டார். மோட்டார் மன்னர் G. D. நாயுடு அவர்கள் மேலை நாட்டில் பிறந்திருப்பாரேயானால் வானளாவப் புகழ்ந்திருப்பார்கள். இந்த நாட்டில் பிறந்த தோஷத்திற்காக அவரது அரிய ஆராய்ச்சிகளையெல்லாம் அடிபாதாளத்தில் அமுக்கி வைத்திருக்கிறார்கள். பல தொழில் ஸ்தாபனங்களைத் துவக்கி இந்நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப்போக்க அவர் எடுத்தக்கொண்ட முயற்சியெல்லாம் சிதறி யடிக்கப்பட்டது. எனினும் அவர் சிந்தை கலங்க

வில்லை. இந்தியாவிலே இரும்பு சுவாசப்பை தயார் செய்து ஆஸ்பத்திரிகளுக்கு இலவசமாகக் கொடுக்க ஒரு புது முயற்சி எடுத்து, அரசாங்கத்துக்கு விண்ணப்பித்துக்கொண்டார். அதுவும் கை கூடவில்லை. நாயுடு அவர்கள் விவசாய ஆராய்ச்சியிலும் கை தேர்ந்த நிபுணர். பழவகை ஆராய்ச்சியிலும் பல அதிசயங்களைச் செய்து காட்டினார். நாயுடு மிக விசித்திரமானவர். நமது நாட்டு மக்களுக்கு இயந்திர ஞானத்தைப் புகுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு (Industrial Labour welfare Association Ltd.) ஸ்தாபனம் செய்து, அதன் மூலம் ஒரு கண்காக்ஷியைத் திறந்து பல லட்சக்கணக்கான ரூபாய் விலை மதிப்புள்ள இயந்திர சாதனங்களை விலைக்கு வாங்கி தினசரி பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும்படி செய்தார். கண் காக்ஷி பார்க்க வருபவர்களுக்குத் தாமே இயந்திர நுணுக்கங்களை விளக்கியும் காட்டுவார். அவரது காக்ஷிசாலையின் மதிப்பு லக்ஷக்கணக்கில் இருக்கும். அந்த கண் காக்ஷியில் நாயுடு அவர்கள் சொந்தமாகக் கண்டு பிடித்த சில புதிய சாமான்கள் வைக்கப்படிருக்கின்றன. இவர் தமது கையாலேயே செய்யப்பட்ட ஐந்து வால்வு ரேடியோ பெட்டி ஒன்றும் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பெட்டியின் விலை வெறும் எழுபது ரூபாய் தான்.

அவரால் கண்டு பிடிக்கப்பட்ட ரேசரும், பிளேடும் வைக்கப் பட்டிருக்கிறது. ஒரு பிலேடைக் கொண்டு இருநூறு தடவை க்ஷவரம் செய்யலாம். இந்தத் தொழிலை வளர்ச்சி செய்ய அரசாங்கம் போதிய எஃகு கொடுக்காததால் நாயுடு அவர்கள் பிலேடு உற்பத்தியையே கைவிட வேண்டி வந்தது, தானே கணக்குப் போடும் இயந்திரம், காசைப் போட்ட மாத்திரத்தில் பாடக்கூடிய இயந்திரம் இம்மாதிரி சுமார் எண்பது வகையான கண்டு பிடிப்புகளைக் கண்டு பிடித்தார். உலகமே போற்றக் கூடிய 'நோபெல்' பரிசு வாங்கிய சர். C. V. ராமன் நாயுடு அவர்களை ஒரு விஞ்ஞானி என்று கூறுகிறார் என்றால் அவருடைய பெருமையை நாம் எழுதித்தான் ஆகவேண்டுமா?

ஜி. டி. நாயுடு அவர்களை ஈன்ற தமிழகம் மிகவும் பெருமைப் படுகிறது, ஏன்? இந்த பாரத நாடே பெருமைப் படத்தான் வேண்டும். அவரது முழுக்கை சர்ட், பஞ்சகச்ச வேஷ்டி, ஈரிழைத்துண்டு, இந்தச் சாதாரண உடைதான் ஜி. டி. நாயுடு அணிவது. எழ்மையான உணவு தான் அவர் உட்கொள்வது. திரு. நாயுடு அவர்களைப் பணக்கார ஆகிக்க வெறி கொண்டவர் அல்ல. அவர் ஒரு சாதாரணத் தொழிலாளராகவே இருப்பார். தொழில் நுணுக்கம் தெரிந்தவராதலால் எந்த தொழிலாளியும் அவரை ஏமாற்ற முடியாது. இதனால் ஜி. டி. நாயுடுவின் மோட்டார் ஸ்தாபனத்தில் இதுவரை ஸ்ட்ரைக் நடந்ததே இல்லை. தன்னிடம் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஒழுக்கமுடையவர்களாகவும் நாணயமுடையவர்களாகவும் இருக்கவேண்டும் என்பது தான் நாயுடுவின் குறிக்கோள்.

திரு நாயுடு அவர்கள் இப்புவியில் யாரையும் பகைவராகக் கருதவில்லை. அவர் சாதாரண தொழிலாளராகவும் சிறு மோட்டார் தொழிலை துவக்கிய காலத்தில் தன்னுடன் இருந்த பலரை இன்னும் ஸ்தாபனத்தில் வேலை கொடுத்தும் ஆதரித்து வருகிறார். நாயுடு எந்த அரசியல் கட்சியிலும் பங்கு கொள்ளாமலே மக்களுக்கு பணியாற்றிய வரலாற்றையே காணலாம். சுயேட்சையாக குற்றம் கண்ட இடத்தில் கண்டிக்கும் மனோபாவம் உடையவர். உலக வரலாற்றைப்படித்தால் மாபெரும் அறிஞர்கள் எந்த கட்சியிலும் பங்குகொள்ளாமலே, மக்களுக்கு பணியாற்றிய வரலாற்றையே காணலாம். சுயேட்சையாக குற்றம் கண்ட இடத்தில் கண்டிக்கும் மனோபாவம் உடையவர். எந்த அரசியல் கட்சியிலும் பங்கு கொண்டு அதன் கட்டுத் திட்டத்திற்கு அடங்கி நடப்பது சிரமம் தான். ஜி டி. நாயுடு அவர்களை நமது நாடு நன்கு பயன் படுத்தி கொள்ள வேண்டுமென்பது தான் எமது அவா. ஏராளமான கைத்தொழில் திட்டங்கள் இருக்கின்றன. அவைகளால் நமது நாட்டின் வேலையில்லா திண்டாட்டத்தை ஒழித்து கட்டலாம்.

'இன்றைய இந்தியா ஆமை வேகத்தில் நகருகிறது' என்று தான் நாயுடுவுக்கு கவலை. இன்று மேலை நாடுகள் கைத்தொழில் புரட்சியால் மகோன்னத நிலை அடைந்திருக்கிறது. உலகத்தைப் பல முறை சுற்றிப் பார்த்த நாயுடு அவர்கள் நமது நாட்டையும் அந்த நிலைக்கு கொண்டுவர இரவு பகலாக சிந்தித்து தீட்டிய திட்டங்கள் பல, இன்றைய அரசாங்கத்தாரால் ஊக்குவிக்கப் படாமல் வீணாக நாயுடு அவர்களின் பழைய பைல் கட்டுகளில் அடங்கி கிடக்கின்றன. ஆனால் மயக்கத்தை தரும் சங்கீதம், நடனம் முதலிய கலைகளுக்கு இந்திய சர்க்கார் எவ்வளவு ஊக்கம் தருகிறது தெரியுமா? அந்த மயக்க விழாக்களில் மந்திரிமார்கள் மதிமயங்கி கிடக்கிறார்கள். ஐயோ பாவம்! நாயுடு அவர்கள் ஏனைய பண மூட்டைகளைப் போல் பணம் சம்பாதிப்பதில் கண்ணும் கருத்துமுடையவர் அல்ல. இது வரையிலும் சம்பாதித்த பணத்தை நல் வழியில் செலவு செய்ய நல்ல ஸ்தாபனங்கள் இந்த நாட்டில் இல்லையே என்றுதான் கவலைப்படுகிறார்.

உருப்படியான நல்ல காரியங்களுக்கு ஏராளமாக அள்ளி தருவார். சோம்பேரிகளுக்கு ஒரு டம்ளர் தண்ணீரும் கொடுக்க மாட்டார். நாயுடு அவர்கள் நம்பிக்கை வைத்திருப்பதெல்லாம் இளைஞர்களிடத்திலும், பள்ளி மாணவர்களிடத்திலும் தான் மனம் சலியாமல் அவர்களிடத்தில் மணிக்கணக்காக பேசுவார். இளைஞர்களும், மாணவர்களும் தான் எதிர் காலத்தை உருவாக்கும் சிற்பிகள் என்பது தான் நாயுடுவின் அசைக்க முடியாத நம்பிக்கை.

ஆம்! அந்த காலம் வந்து தான் தீரும். அறிஞர் ஜி. டி. நாயுடுவின் உள்ளத்தில் ஆழ்ந்து கிடக்கும் எண்ணங்கள் எல்லாம் உருப்பெற்று பல தொழிற்சாலைகளாக மலர்ந்து, வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிக்கப்பெற்று, எல்லா இல்லங்களிலும், 70 ரூபாய் விலையுள்ள ரேடியோக்கள் இன்னிசை முழக்கம் செய்தும், மாடுபோல் உழைக்கும் மனிதன் தன்மை மாற்றப் பட்டு எறும்பு போல் சுறு சுறுப்பாக உழைத்தும், வானம்பாடி போல் உல்லாசமாகத் திரிந்தும், மனிதனை மனிதன் இழுக்கும் ரிக்ஷாக்கள் ஒழிக்கப்பட்டும், மனிதனை மாடு இழுக்கும் நிலையும் மாற்றப்பட்டு, நூறு ரூபாய் விலையில் கிடைக்கும் சிறிய மோட்டாரிலும், ஆயிரம் ரூபாய் விலையில் கிடைக்கும் ஆகாயத்தில் பறக்கும் வான ஊர்தியும் வந்து தான் தீரும். மலம் எடுத்து வாழும் தோட்டி தொழிலாளியும் அன்று காணப்படமாட்டான். மனிதனால் ஏவப்பட்டு வெறும் மம்மட்டியே, அந்த வேலையைச் செய்யும். கிராமங்கள் பழைய கிராமங்களாகவே இருக்க வேண்டுமென்ற இன்றைய கிராமப் புனருத்தாரண இயக்கங்களுக்கு சாவுமணி அடித்து, கிராமங்கள் பட்டணம் ஆக்கப்பட்டு பரிபூர்ண சுக போகங்களை சுலபச் செலவில் அனுபவித்துத்தான் தீருவார்கள். அந்த காலத்தில் நாயுடு அவர்களின் நிழலுருவப் படங்கள் நாடெங்கும் தொங்கவிடப்படத்தான் போகிறது. அவரது ஒவ்வொரு வார்த்தைகளும் பொன் எழுத்தால் பொறிக்கப்பட்டு கல்லூரி மாணவர்கள் வாய்ப்பாடம் செய்து ஒப்புவிக்கத் தான் போகிறார்கள். அந்தக் காலத்தை விரைவு படுத்த இப்பொழுதிருந்தே இளைஞர்கள் முன்னுக்கு வரவேண்டுமென்பதுவே எமது நோக்கம். அது தான் நாயுடு அவர்களுக்கு நாம் செய்யவேண்டிய நன்றி.

ஆசிரியர், வெளியிடுபவர் :- பண்டிட் ஜெயிலானி விஷாரத், தாராபுரம். அச்சிட்டது:- ராயல் பிரஸ், ராஜ வீதி, கோவை.